பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 10 2026** **06 45**
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - கனடா நாட்டு மக்களின் நலன்களுக்காக கனடாவுடன் இணைந்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கையில் ஈடுபட இந்தியா உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. கரும்பு விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய குழு ஒன்றை மத்திய அரசு நியமித்துள்ளது.

3. மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் திரு. காந்தி ராஜ் கூறியுள்ளார்.

4. நீலகிரி, கோயம்புத்தூர், தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான நான்காவது டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் 24 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><>

இந்தியா - கனடா நாட்டு மக்களின் நலன்களுக்காக கனடாவுடன் இணைந்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கையில் ஈடுபட இந்தியா உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறை பயணமாக புதுதில்லி வந்துள்ள கனடா வெளியுறவு அமைச்சர் திருமதி. அனிதா ஆனந்த், தம்மை சந்தித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்தும் அவர் விவாதித்தார்.

வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு, எரிசக்தி, கல்வி, மக்களுக்கிடையேயான தொடர்பு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தைகளை விரைவில் நிறைவு செய்வது குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

அத்துடன் இருதரப்பு நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் குறித்தும் பிரதமரும், கனடா வெளியுறவு அமைச்சரும் தங்களது கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

<><><><><>

கரும்பு விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய குழு ஒன்றை மத்திய அரசு நியமித்துள்ளது.

நித்தி ஆயோக் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ரமேஷ்சந்த் தலைமையிலான இக்குழு, கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பதற்கான உரிய வழிமுறைகளை பரிந்துரைக்க நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு விவசாய பிரதிநிதிகள், சர்க்கரை ஆலை சங்கங்கள், மாநில அரசுகள் மற்றும் இதர நிபுணர்கள் உள்ளிட்டோருடன் ஆலோசிக்கும் என்று மத்திய உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய வேளாண் மற்றும் உணவுத்துறை அமைச்சர்களுடன் கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களை சேர்ந்த கரும்பு விவசாயிகளின் பிரதிநிதிகள் நடத்திய கூட்டத்தின் போது, மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை அடுத்து இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

<><><><><>

மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்டப்பேரவை தொகுதியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று 150 பேருக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி அவர் பேசினார்.

பெண்களுக்கு எந்த இடர்பாடும் இருக்கக்கூடாது என்ற நோக்கில், முதலமைச்சர் திரு. விஜய், நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. காந்திராஜ் கூறினார்.

<><><><><>

தேசிய அஞ்சல் வாரம் நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக பள்ளி மாணவர்களிடையே கடிதம் எழுதுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் தலைமை அஞ்சலகம் சார்பில் நிகழ்வு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடிதம் எழுதியது தங்களுக்கு புதிய அனுபவமாக இருந்தது என்று அதில் பங்கேற்ற மாணவிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<><><><><>

ஆயுதபூஜை மற்றும் தசரா பண்டிகையையொட்டி, தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.

அதன்படி, பெங்களூர் கண்டோன்மென்ட்டிலிருந்து தூத்துக்குடிக்கு நாளை இரவு மணி 9-45-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

மற்றொரு ரயில் சென்னை சென்ட்ரலுக்கு காலை மணி 7-30-க்கு இயக்கப்படுகிறது.

போத்தனூரில் இருந்து New Tinsukia-வுக்கு நாளை அதிகாலை மணி 4-30-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களுக்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்கும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><>

தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், விருதுநகர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளிலும் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட 15 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தூத்துக்குடியில் மழை பாதிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மேயர் ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><>

சவூதி அரேபியாவில் நிலவும் தற்போதைய நிலையை கருத்தில்கொண்டு அங்கு வசிக்கும் இந்தியர்கள் அந்நாட்டின் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு, இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

-----

யுக்ரைனின் மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்ற அமெரிக்க அதிபரின் அறிவிப்பையும் மீறி, ரஷ்யா தாக்குதல் நடத்திவருவதாக யுக்ரைன் அதிபர் திரு. ஹோலோடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

-----------

தில்லி மாநகராட்சி பள்ளியை சேர்ந்த 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சீருடை மற்றும் புத்தகப்பை வாங்குவதற்காக தலா ஆயிரத்து 370 ரூபாயை தில்லி அரசு மாணவர்களின் வங்கிக்கணக்கில் செலுத்தியுள்ளது.

---------

மகாராஷ்டிராவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுகாகளை சேர்ந்த மாணவர்களிடம் தேர்வுக்கட்டணம் வாங்கவேண்டாம் என்று அனைத்து கல்லூரி நிர்வாகங்களுக்கும் அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

--------

கோட்டை அமீர் மதநல்லிணக்க பதக்கத்தைப்பெற தகுதியுடையவர்கள் டிசம்பர் 15 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாநில அரசு அறிவித்துள்ளது.

------

ராமநாதபுரத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. மதன் ராஜா கலந்துகொண்டு கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

---------

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் அருகே 54 பயனாளிகளுக்கு ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------

மத்திய-மாநில அரசுகளின் மானியத்துடன் கூடிய சூர்ய மின் உற்பத்தித் திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் விழுப்புரத்தில் நடைபெற்றது.

----------

சேலம் மாவட்டம் பெரிய கல்வராயன்மலை கீழ்நாடு, சூளாங்குறிச்சி கிராமங்களில் 211 பயனாளிகளுக்கு ஆட்சியர் திரு. இளம்பகவத் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். -------

வடகிழக்குப் பருவமழையையொட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தலைமையில் நடைபெற்றது.

------------

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் 24 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 247 ரன் எடுத்தது.

அந்த அணியின் தொடக்கவீரர் Shai Hope 50 பந்துகளில் 102 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பின்னர், 248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 19 புள்ளி 3 ஓவரில், 9 விக்கெட் இழப்பிற்கு 223 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

அர்ஷ்திப் சிங் காயம் காரணமாக தொடர்ந்து பேட் செய்ய இயலவில்லை.

5 போட்டிகளை கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா 2 போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

ஐந்தாவது மற்றும் கடைசி டுவென்டி-டுவென்டி போட்டி நாளை மறுநாள் பெங்களூருவில் நடைபெற உள்ளது.

-------------

டென்மார்க் ஒபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** காலிறுதிக்கு முந்தையச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் **21-18, 22-20** என்ற செட்கணக்கில் பல்கேரியாவின் **Kaloyana**-வை வென்றார்.

--------------

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Jagsher Singh Kahngurra, NishChal Chand, Dev Rupa Relia, Tanvi Reddy, Shaina Manimuthu,** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------